

**Long-Term Care Home Update** | *Community Newsletter* | Lakeridge Health

**மே 2021**

## முதன்மையானதாக முன் நிறுத்தப்படும் வதிவாளர்களின் வாழ்க்கைத் தரம்

கடந்த கோடைப் பருவகாலத்தின் பொழுது ஒன்ராறியோ அரசு, Lakeridge Health அமைப்பு மற்றும் Infrastructure Ontario நிறுவனம் ஆகியவற்றை பங்காளர்களாகச் சேர்த்தவாறு ஒரு கூட்டுமுயற்சியாக ஏஜாக்ஸ் பிக்கறிங் வைத்தியசாலை ஸ்தலத்தில் புதிய ஒரு நீண்டகாலப் பராமரிப்பு இல்லத்தைக் கட்டியெழுப்பும் பணியினை அறிவித்து இருந்தது. டூறாம் பிரதேச மக்களுக்கென 320 புதிய படுக்கை வசதிகளைக் கொண்டு வருவது மட்டுமல்லாமல், இந்த இல்லத்தின் அமைப்புத் திட்டத்தின் கீழ் புதுமை நிறைந்த நோய்த் தொற்றுத் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு (IPAC) நடைமுறைகள் நிறுவப்பட்டு உள்ளதுடன் இதன் நவீன வடிவமைப்பில் வதிவாளர்களின் வாழ்வுத் தரத்துக்கு முதன்மை இடம் கொடுக்கப்பட்டு உள்ளது.

இந்த இல்லத்தின் தளநில அமைப்புத் திட்டத்தில், உதாரணமாகக் கூறுவதென்றால் காவல்படுத்திய அழகுபடுத்திய நிலா முற்றங்கள் மற்றும் சமூக உறவாடும் வெற்றிடங்கள் பல உள்ளடங்கி இருக்கின்றன. கூடிவாழும் வதிவாளர்கள் மற்றும் குடும்பத்தினருடன் சேர்ந்து இருப்பதற்கு இவை பயன்படும். கட்டிடத்தில் பிரகாசமான சூரிய ஒளி நிறைந்த வெற்றிடங்களை உருவாக்குவதற்கென பகல் நேர ஒளி ஆய்வு ஒன்று நடாத்தப்பட்டது. அகலமான நடை கூடங்கள் வதிவாளர்களின் போக்குவரத்துக்கு உதவியாக இருக்கும். இவற்றுடன் பூரணமாகத் தனித்த முறையிலும் பாதி நிலைத் தனி முறையிலும் வதிவாளர்கள் வசிப்பதற்கென அமைக்கப்பட்டு உள்ள அறைகள் சௌகரியமான சூழல்களை வழங்குகின்றன.



IPAC ஆரோக்கிய நடைமுறைகளின் மிகச் சிறந்த நியமங்கள் இந்த இல்லத்தின் வடிவமைப்பில் மையமாக அமைந்து இருப்பதனால் வதிவாளர்களுக்கும் குடும்பங்களுக்கும் பணியாளர்களுக்கும் இந்த இல்லம் மிகுந்த சுகநலப் பாதுகாப்புடன் கூடிய ஒரு சுற்றாடலைத் தருகிறது.

இந்த இல்லம் 16-படுக்கைகள் கொண்ட கொத்தணிகளாகப் ('clusters') பிரிக்கப்பட்டு, அவற்றில் ஒவ்வொன்றுக்கும் வேறான உணவு உண்ணும் பகுதிகள், சூரிய ஒளி அறைகள், ஓய்வு அறைகள் மற்றும் செயற்பாட்டு வெற்றிடங்கள் ஆகியன வழங்கப்பட்டு இருக்கும். இவ்வாறான கொத்தணிகள் அதிக சௌகரியத்துடன் கூடிய வீட்டினையொத்த சூழலை உருவாக்குவதுடன் நோய் ஏதாயினும் பரவுகின்ற ஒரு நிலையின் பொழுது தேவையென்றால் வதிவாளர்களை ஒதுங்கி வாழ அனுமதிப்பதற்கும் உதவுகின்றன. வதிவாளர்களுக்குரிய வாழிடங்களில் இருந்து வேறுபட்டனவாக "சுத்தமான" போக்குவரத்துப் பாதைகள் பேணப்பட்டு உள்ளே வரும் உணவு வழங்கல்கள் மற்றும் சலவைத் துணிகள் போன்றவற்றில் இருந்து வெளியேறும் அசுத்தமான உடைகள் மற்றும் பயன்படுத்திய பொருட்கள் பிரித்துக் கையாளப்படும். பணியாளர்கள் இவ்வாறான போக்குவரத்து வழிகளை பார்வையிடும் பிரத்தியேக அனுமதியைப் பெற்றிருப்பர்.

Ajax Pickering Hospital (ஏஜாக்ஸ் பிக்கறிங் வைத்தியசாலை) மற்றும் Lakeridge Health system (லேக்றிஜ் ஆரோக்கிய தொகுதி அமைப்பு) ஆகியனவும் பூரணமாக இல்லத்துக்கு ஆதரவு தந்து பணியாளர்களுக்கு வேண்டிய மருத்துவம் மற்றும் நோய்த் தொற்றுத் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு தொடர்பிலான நிபுணத்துவத்தையும் வழங்கும்.

இப்புதிய இல்லம் இறுதியாக மிகவும் புதிதான வடிவமைப்பு, நடைமுறைகள் மற்றும் சிந்தனை ஆகியவற்றை உள்ளடக்கியதாக வதிவாளர்களுக்கும் அவர்களது குடும்பங்களுக்கும் ஒரு சௌகரியமான பாதுகாப்பான இடத்தை உருவாக்கும் என்பதுடன் பணியாளர்களுக்கும் இனிய அனுபவத்தை வழங்கும் ஒரு வேலைத்தலமாகவும் அமையும்.

## கட்டுமான வேலை முன்னேற்றம் திட்டமிட்டவாறு நிகழ்கிறது

புதிய நீண்டகாலப் பராமரிப்பு இல்லத்தின் கட்டுமான வேலை நம்பமுடியாத அளவில் வேகமாக நகர்ந்து செல்கிறது. இந்த மாத முடிவில் இரண்டாவது மற்றும் மூன்றாவது தளங்களின் அமைப்பு வேலை முடிவுக்கு வரும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. மேலும் 7-மாடி உயரத்துக்கு மின் உயர்த்தியின் மத்திய பகுதி நிறுவும் பணி பூரணமாக்கப்பட்டு விட்டதுடன் இக்கட்டுமானப் பணியின் எஞ்சிய பகுதிகள் யாவற்றுக்கும் மின் உயர்த்தி வழியான பொருள் வழங்கல் செய்ய உதவுவதற்கு அது தயாராக உள்ளது.



பூரணமாக்கிய மின் உயர்த்தியின் மத்திய பகுதி மற்றும் பாதி முடிந்த இரண்டாவது தளத்தில் 32 கழிவறைக் கட்டமைப்பு அலகுகள்: மே 8, 2021

அடுத்து வரும் சில வாரங்கள் மற்றும் மாதங்களில் நடைபெறும் வேலை பெரும்பாலும் ஒரே மாதிரியான காட்சியையும் கேட்கும் விபரங்களையும் கொண்டதாகவே இருக்கும். இக்காலத்தின் பொழுது PCL நிறுவனப் பணிக்குழுவினர் உருக்காலான சுவர்களையும் தரைகளுக்கான கட்டம் கட்டமான துண்டுப் பகுதிகளையும் நிறுவி நான்காவது மற்றும் ஐந்தாவது மாடிகளுக்கு உயரச் செல்லுவர். இத்துடன் முன்பாகவே வடிவமைக்கப்பட்ட வதிவாளர் கழிவறைக் கட்டமைப்பு அலகுகள் தொடர்ந்து கொண்டுவரப்பட்டு உரிய இடங்களில் இறக்கிப் பதிக்கப்பட்டு வருகின்றன. இக்கட்டிட அமைப்புக் காலம் முழுவதும், குறிப்பாக இப்பொழுது நிலவி வரும் வீட்டில் தங்கி விடும்படியான உத்தரவின் பொழுது, கோவிட்-19 நோய்க்கான நடைமுறை ஒழுங்குகள் கண்டிப்பாகப் பின்பற்றப்பட்டு

வேலை ஸ்தலத்தில் உள்ள தொழிலாளர்கள், அவர்களது குடும்பங்கள் மற்றும் சுற்றியுள்ள எமது சமூகம் ஆகியவற்றை ஆரோக்கியமாகவும் பாதுகாப்பாகவும் வைத்திருக்க முயற்சி எடுக்கப்படும்.

### இலக்கங்களில் இல்லத்தின் அமைப்பு

கட்டிட அமைப்பு அடங்கிலும் இந்த ஸ்தலத்தில் 2,605 சதுரமீற்றர் அளவிலான கொங்கிறீற் சீமெந்துக் கலவை இடப்படும். அது ஏறத்தாழ **3.6 கால்பந்து மைதானங்களுக்குப் பரவக் கூடிய அளவு கொங்கிறீற் ஆகும்.**

மின் உயர்த்தியின் மத்திய பகுதி 7 மாடி உயரத்தில் 88 அடியிலும் கூடுதலாக நிற்கிறது. இது **பைஸா நகரில் உள்ள சரிந்த கோபுரத்தின் உயரத்தில் கிட்டத்தட்ட பாதி அளவு எனலாம்.**

## கட்டுமான வேலைக்காக வாகனம் நிறுத்துமிடம்: புதிய தகவல்

கட்டுமான ஸ்தலத்தில் பணிபுரிவோரின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வரும் இந்நிலையில் இந்த ஸ்தலத்தைச் சுற்றிய பகுதியில் வாகனங்களை நிறுத்தும் இடம் எடுப்பது சிரமம் ஆன காரியமாக மாறி வருகிறது. இதற்காக நாம் ஜுன் மாதம் தொடக்கம் புதிய ஒரு ஏற்பாட்டினை நடைமுறைப்படுத்த திட்டமிட்டு வருகிறோம். இதன்படி கட்டுமானத் தொழிலாளர் குழுக்கள் தமது சொந்த வாகனங்களை நிறுத்துவதற்கு Barr Road மற்றும் Monarch Avenue சந்திக்கும் மூலைக்கு அண்மையில் உள்ள ஒரு துண்டு நிலத்தை உபயோகிக்க முடியும். வாகனங்களை நிறுத்துவதற்கு இப்புதிய இடம் வரும்பொழுது, கட்டுமான ஸ்தலத்தைச் சூழ்ந்து வதிவாளர்கள் உள்ள வீதிகளில் நிறுத்தப்படும் வாகனங்கள் குறைந்து விடும். எனினும் வீதிகளின் ஓரத்தில் உள்ள நடைபாதைகளிலும் Clements Woodlot பகுதியில் உள்ள இயற்கை வழிப்பாதையிலும் (trail) நடந்து செல்வோரின் எண்ணிக்கை அதிகரிக்கலாம் என்று எதிர்பார்க்கிறோம். கட்டிட ஸ்தலத்திற்குப் போய் வரும் தொழிலாளர்கள் இவற்றை உபயோகிப்பர்.

எமது இல்லத்திற்கான கட்டிடப் பணி 2022 ஆம் வருடத்தின் ஆரம்ப காலத்தில் முடியும் வரையில் இந்த நிலப்பரப்பினை Lakeridge Health ஆரோக்கிய அமைப்பின் உபயோகத்துக்காக நீண்டகாலமாக உள்ளூரில் சொந்த வியாபாரம் புரிந்து வரும் ஒரு குடும்ப நிறுவனத்தினர் தர்ம சிந்தனையுடன் வழங்கியுள்ளனர். எமது அயலவர்கள் எல்லோரின் தர்ம உணர்வும் நீண்ட காலமாக எமக்கு உதவிகரமாக இருப்பதனால் இப்புதிய கட்டிடத்தை நிஜமாக்க எம்மாலும் முடிகிறது. எனவே இன்றுவரை எமது கட்டிட முயற்சிக்கு ஆதரவு வழங்கிய ஒவ்வொருவருக்கும் நாம் நன்றி கூறுகிறோம்.




## எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்

இல்லத்தின் முன்னேற்றம் பற்றிய புதிய செய்திகளை அறிந்தவாறு இருக்க விரும்புகிறீர்களா? **எமது மின்னஞ்சல் தொடர்புப் பட்டியலில் இணைந்து கொள்ளுங்கள். உங்கள் பெயர் மற்றும் மின்னஞ்சல் முகவரி ஆகியவற்றை AjaxLTC@lh.ca.** என்ற இணைய முகவரிக்கு அனுப்பி விடுங்கள் . தொடர்ந்து வரும் தகவல் மற்றும் புதிய விடயங்கள் பற்றிய விபரங்கள் உங்களுடைய மின்னஞ்சல் கடிதப் பெட்டிக்கு நேரடியாக வந்து சேரும்!

இச் சமயத்தில் உங்களிடம் கேள்விகள் உண்டு என்றால் அல்லது இது பற்றி மேலதிக தகவலினைப் பெற விரும்பினால், தயவுசெய்து எமது இணையத்தளம் **lakeridgehealth.on.ca** சென்று பாருங்கள் அல்லது தொலைபேசியில் அழையுங்கள்**: 905-576-8711 தொடரெண் 34167** அல்லது மின்னஞ்சல் அனுப்புங்கள்: **AjaxLTC@lh.ca**. நீங்கள் எங்களை ருவிற்றர் (Twitter) மற்றும் முகநூல் (Facebook) ஆகிய ஊடகத் தளங்களிலும் கண்டு பின் தொடர முடியும்.